**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 44/2024 தேதி- 20.07.2026

(D.W.1) .லாரன்ஸ்

**குறுக்கு விசாரணை**

வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியினுடைய சொத்தை எனக்கு கிரையம் தந்துவிட்டு நான் அவர்களை ஏமாற்றி பதிவு செய்து கொண்டதாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியையும் அவரது குடும்பத்தாரையும் 30 வருடமாக எனக்கு தெரியும். வாதி எனக்கு உறவினராக என்றால் உறவுமுறைதான். வழக்கு பட்டிகை சொத்தை கிரையம் கொடுக்க முன்வந்தது வாதியா அல்லது நான் முன்வந்து கிரையம் கேட்டேனா என்றால் வாதியும் அவரது மனைவியும் அவர்களது மகளின் திருமணத்திற்காக எனது வீட்டிற்கு வந்து திருமண செலவிற்காக வேண்டி கிரையம் கொடுக்க சம்மதித்து கிரையம் கொடுத்தார்கள். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை. நான் சொத்தை வாங்குவேன் என்கிற விபரம் வாதிக்கும் அவரது மனைவிக்கும் எப்படி தெரியும் என்றால் அவர்களது மகளின் முதல் திருமணம் தடைபட்டு விட்டதால் 2 வது திருமணம் பேசி முடிப்பதற்காக என்னை அழைத்து சென்று திருமணம் பேசி முடித்தபின்பு திருமண செலவிற்காக வழக்கு பட்டிகை சொத்தை விற்க வேறு நபர்களிடம் கேட்டு அவர்கள் சம்மதிக்காததால் என்னிடம் விற்பனை செய்தார். வாதியும் அவரது மனைவியும் எனது வீட்டிற்கு எந்த தேதியில் வந்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை.

சொத்தை விற்பதற்கு கிரைய தொகை எவ்வளவு பேசினார்கள் என்றால் 50,000 ரூபாய் கேட்டார்கள் நான் 46500 ரூபாய் கொடுத்தேன். நான் 46500 என குறிப்பிடுவது பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் தொகை என்றால் சரிதான். பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் தொகை அரசு நிர்ணயித்த தொகை என்றால் சரிதான். அரசு நிர்ணயித்த தொகையை விட சந்தை மதிப்பு 10 மடங்கு அதிகமாக இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பட்டிகை சொத்து கருங்கல் தேங்காய்பட்டிணம் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். கருங்கல் தேங்காய்பட்டிணம் ரோட்டில் எந்த இடத்தில் சொத்தை வாங்க வேண்டுமென்றாலும் 1 சென்டிற்கு 10 லட்சம் ரூபாய்க்கு குறைவாக சொத்தை வாங்க முடியாது என்றால்

அதுபற்றிய விபரம் தெரியாது. பட்டிகை சொத்து தற்போது எவ்வளவு விலை போகும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வாதியின் குடும்பத்தாருடன் நான் நெருங்கி பழகியதால் என்னை நம்பினார்கள் என்றால் அப்படி எதுவும் கிடையாது. அவ்வாறு நெருங்கி பழகி நம்பியதால்தான் அவர்களது மகளின் திருமண பேச்சிற்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றால் அவர்களது குடும்பத்திலுள்ள உறவினர்கள் யாரும் வராததால் என்னை அழைத்து சென்றார்கள். வாதியின் குடும்பத்தாருடன் நெருங்கி பழகி அவர்களை நம்ப வைத்ததால் அவர்களது மகளின் திருமண நிகழ்விற்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. வாதி தனது மகளின் திருமணத்திற்காக என்னிடம் 50000 ரூபாய் கடன்தான் கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் பணத்தை கடனாக கொடுக்க வேண்டுமென்றால் கடன்முறி பத்திரம் எழுதி தரவேண்டுமென்று எழுதிக்கேட்டேன் என்றால் சரியல்ல. நான் பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில்வைத்து கொடுத்தேன். சார்பதிவாளரின் முன்னிலையில் கொடுத்தேனா அல்லது வெளியே வைத்து கொடுத்தேனா என்றால் வெளிவே வைத்து கொடுத்தேன்.

கிரைய தொகையை ரொக்கமாக ெகொடுத்தேனா என்றால் வாதியின் மனைவியின் கையில் கொடுத்தேன். வங்கியின்மூலம் எந்த பண பரிமாற்றமும் செய்யவில்லை. வாதியின் மனைவி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தாரா என்றால் வந்தார் வெளியே நின்றார். வாதியின் மனைவி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. பத்திரத்தை தயாரித்தது யார் என்றால் ஜெயம் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. பத்திரம் எழுதுவதற்கு ஏற்பாடு செய்ததும் பத்திர செலவு செய்ததும் நான்தான். பத்திரத்தில் கையெழுத்தை எங்கு வைத்து போட்டோம் என்றால் எழுத்தர் அலுவலகத்தில் வைத்து வாதியும் அவரது மனைவியும் படித்து பார்த்து கையெழுத்து இட்டார்கள். எழுத்தர் அலுவலகத்திற்கு வாதியோ அவரது மனைவியோ வரவில்லை என்றால் சரியல்ல.

சார்பதிவாளர் அலுவலகத்தில் வெளியே வைத்து அவசரகோலத்தில் படித்து பார்க்கவிடாமல் வாதியிடம் கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் வாதியிடம் பணம் வாங்கினீர்களா என்றுதான் கேட்டார் வேறு எந்த

விவரமும் கேட்கவில்லை என்றால் சார்பதிவாளர் எத்தனை செண்ட் நிலத்தை விலைக்கு கொடுக்க போகிறீர்கள் கிரைய ஆதாரம் பெற்றுக்கொண்டீர்களா என்றும் சொத்து விற்க முழு சம்பந்தமா என்று கேட்டபின்பு பதிவு செய்தார். நான் மேற்படி கூறிய விபரம் அனைத்தும் நான் தாக்கல் செய்துள்ள சிடி யில் துலங்கும் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த சிடி. சாட்சி கையெழுத்து யாரெல்லாம் போட்டார்கள் என்றால் எனது மனைவி மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள ஒரு நபரும் வாதியின் மனைவியை சாட்சியாக போட கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டார். வாதியினுடைய மனைவி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வராததால்தான் அவர் கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. நான் மோசடியாக ஆவணத்தை தயார் செய்ததால்தான் எனக்கு வேண்டப்பட்ட நபர்களை சாட்சி கையெழுத்து போட அனுமதித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வாதியின் மனைவி வரவில்லை அவரது மனைவியின் சகோதரரிதான் வந்தார் அவரிடம் சாட்சி கையெழுத்து போட நான் கேட்கவில்லை என்றால் வாதியின் மனைவியின் சகோதரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவும் இல்லை கிரையம்பற்றிய விபரம் அவருக்கு தெரியாது. நான் அசல் வழக்கு எண் 16/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு மாவட்ட பதிவாளர் ரத்து செய்த ஆவணத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல நான் ஓட்டுநராக வேலை செய்கிறேன். வாதியை நம்ப வைத்து அவர்களை ஏமாற்றி அழைத்துசென்று விலையாதாரத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மோசடியாக ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆதாரம் சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கடன் வாங்கிய தொகையை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் வாதி என்னிடம் கடன் வாங்கவில்லை திரும்ப செலுத்தவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பட்டா, கரரசீது அனைத்தும் மோசடியாக ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் வருவாய் அலுவலகத்தில் முறையாக மனு கொடுத்து பெறப்பட்ட ஆவணம்.

வாதியின் பெயரிலிருந்த பட்டாவை எனது பெயரில் மாற்றுவதற்கு வாதிக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் அன்று பணியில் இருந்த கிராம நிர்வாக

அலுவலர் வாதியின் மனைவிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்பின்புதான் பட்டா பெயர் மாற்றம் செய்தார். பட்டாவில் பெயர் மாற்றம் செய்வது தாசில்தாரின் பணி கிராம நிர்வாக அதிகாரி அல்ல என்றால் கிராம நிர்வாக அதிகாரி கள ஆய்வு செய்து கொடுக்கும் ஆவணத்தின் அடிப்படையில்தான் தாசில்தார் பட்டாவில் பெயர் மாற்றம் செய்தார். பட்டாவில் பெயர் மாற்றம் செய்யவதற்கு தாசில்தாரிடமிருந்து எந்த அறிவிப்பும் வாதிக்கு அனுப்பவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. அதைப்பற்றி விசாரிக்க என்னையோ வாதியையோ அழைக்கவில்லை என்றால் எந்த பட்டா மாற்றமும் தாசில்தார் விசாரணை மேற்கொள்ளமாட்டார்.

கிராம நிர்வாக அலுவலரை கைவசப்படுத்தி பெறப்பட்ட பட்டா மற்றும் கரத்தீர்வை ரசீது அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை குறித்து நான் எந்த அனுபவமும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திலிருக்கும் முள்வேலி வாதியால் போடப்பட்டது என்றால் சரியல்ல நான்தான் முள்கம்பி அமைத்தேன். எந்த தேதியில் முள்வேலி போட்டேன் என்று ஞாபமில்லை. வழக்கு பட்டிகை சொத்து வாதியின் வீட்டின் எதிர்புறம் இருக்கும் சொத்து என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை நான்தான் அனுபவித்து வருவதாக கூறுவது சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இடையே கிரைய உடன்படிக்கை ஏதாவது உண்டா என்றால் இல்லை. நானும் வாதியும் கிரையம் பற்றி பேசியதற்காக சாட்சியம் உண்டா என்றால் எனது வீட்டில் வைத்து பேசியதால் எனது மனைவியை தவிர வேறு யாரும் இல்லை. கிரையத்தை பற்றி பேசாததால் கிரைய உடன்படிக்கையும் இல்லை சாட்சியமும் இல்லை என்றால் சரியல்ல.

மோசடியான ஆவணத்தை அடிப்படையாக கொண்டு பட்டிகை சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணம் மோசடியானது என்பதால் அது ரத்துசெய்யப்படவேண்டிய ஆவணம் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் செலவு தொகையுடன் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.